







**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

*We Are Here..!! To Guide You..!!*









# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 15.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்










The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## இந்திய நிகழ்வுகள்

- ஜிஎஸ்டி கவுன்சிலின் **39வது கூட்டம்** டெல்லியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. செல்போன்களுக்கான ஜிஎஸ்டி வரி 12 விழுக்காட்டில் இருந்து 18 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது என்று **நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.**
    - கைகளால் செய்யப்படும் மற்றும் எந்திரத்தால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளுக்கான ஜிஎஸ்டி வரியை ஒரே சீராக மாற்றியமைக்க வேண்டும் என தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில அரசுகள் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்தார்.
    - **செய்தி துளிகள்**
        - **தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில** அரசுகளின் கோரிக்கையை ஏற்று தீக்குச்சிகளுக்கான ஜிஎஸ்டி வரியை ஒரே மாதிரியாக 12 விழுக்காடாக மாற்றியமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றமானது** (International Military Council on Climate and security – IMCCS) மாறிவரும் காலநிலைப் பாதுகாப்பின் அபாயங்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் அவற்றிற்குத் தீர்வு

காண்பதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள உலகெங்கிலும் உள்ள மூத்த இராணுவத் தலைவர்கள், பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகும்.

- காலநிலை மாற்றத்தின் பாதுகாப்பு மற்றும் இராணுவ பரிமாணங்களுக்குத் தீர்வு காண்பதற்கான தகவல்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வதற்காக இராணுவ நிபுணர்களிடமிருந்து அதிகரித்து வரும் கோரிக்கைக்கு எதிர்வினையாற்றுவதற்காக **IMCCSன் அறிமுகமானது 2019ஆம் ஆண்டின் நெதர்லாந்தின் ஹேக்கில் அறிவிக்கப்பட்டது.**
- **செய்தி துளிகள்**
  - IMCCS ஆனது காலநிலை மற்றும் பாதுகாப்பு மையத்தால் நிர்வகிக்கப்படுகின்றது.
  - சமீபத்தில் உலகக் காலநிலை மற்றும் பாதுகாப்பு அறிக்கையானது IMCCS அமைப்பால் வெளியிடப்பட்டது.

- **MicroSoft - லிருந்து பில்கேட்ஸ் விலகல்** ... திடீர் அறிவிப்பு !
  - மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் இருந்து இணை நிறுவனர் பில்கேட்ஸ் விலகியுள்ளார்.
  - **மைக்ரோசாப்ட் நிறுவனத்தில்** இயக்குநர் குழுவில் இருந்து நிறுவனர் **பில் கேட்ஸ்** விலகியுள்ளார்.
  - **செய்தி துளிகள்**
    - அவர் பொதுச்சேவையில் ஈடுபடப்போவதாகவும், அதனால் தன் நிறுவனப் பதவியில் இருந்து விலகப்

போவதாகவும் அறிவித்துள்ளார். மேலும், அவர் பதவி விலகினாலும் நிறுவனத்துடன் தொடர்பில் இருக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஹீரோ இந்தியன் சூப்பர் லீக் **6-ஆவது சீசன்** இறுதி ஆட்டத்தில் சென்னையின் எ.்.ப்சி அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது கொல்கத்தா **ஏடிகே எ.்.ப்சி.**
    - இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் **கோவா நேரு விளையாட்டரங்கில் மார்ச் 14ம் தேதி** இரவு நடைபெற்றது.
    - **செய்தி துளிகள்**
        - சென்னையின் எ.்.ப் சியும், ஏடிகே எ.்.ப் சியும் ஐஎஸ்எல் கால்பந்து இறுதி போட்டியில் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

We Shine Academy™

## முக்கிய தினங்கள்

- நுகர்வோரின் உரிமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மார்ச் 15ல் உலக நுகர்வோர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. **“நிலையான நுகர்வோர்“** என்பது இந்தாண்டு மையக்கருத்து. சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படாத மற்றும் பருவநிலையை பாதிக்காத வகையில் நிறுவனங்களின் தயாரிப்புகள் மற்றும்

நுகர்வோரின் பயன்பாடு இருக்க வேண்டும் என இந்தாண்டு மையக்கருத்து விளக்குகிறது.

- சர்வதேச நுகர்வோர் அமைப்பு 1960 ஏப்., 1ல் தொடங்கப்பட்டது. இதில் **120 நாடுகளைச் சேர்ந்த 250 உறுப்பினர்கள்** உள்ளனர்.

## திருக்குறள்

**குறள்** : **138**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : ஒழுக்கமுடைமை

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

**விளக்கம்:** நல்லொழுக்கமானது நன்மைக்குக் காரணமாகும் ; தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தைக் கொடுக்கும்.

We Shine Academy TM